5th August 1966]

திரு. ஜே. மாதா கவுடர் : அந்தக் கட்டடத்தை இந்த ஆண்டு முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. போதிய அளவு பணம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மறுபடியும் அந்த வேலை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று முன்பே கூறினேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அங்கு மூன்று கட்டடங்கள் கட்டு வதற்கு உத்தேசிக்கப்பட்டு ஒரு கட்டடம் கட்டப்பட்டு அதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் திறந்திருக்கிறார்கள். இரண்டாவது கட்டடமும் திறக்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறது. மூன்று வது கட்டடத்தையும் நெருக்கடி நிலைமை என்று பாராமல் உடனடி யாகக் கட்டி முடிக்க உத்தரவிடப்படுமா ? அங்கு 1,200 மாணவர் களுக்கு மேல் சேர்ந்திருக்கிற காரணத்தால் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதையும் உடனடியாகக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பண நெருக்கடி நிலையைப் பொருட்படுத்தாது கூடியவரையில் நிதி ஒதுக்கி கட்டடங்கள் கட்டப்பட்டுதான் வருகின்றன. முதலில் நீலகிரியில் அரசினர் கல்லூரி அமைக்கப்பட்டபோது நீலகிரி மக்கள் ஒரு தொகை நன்கொடை அளிப்பதாகச் சொன்னார்கள் என்பது கனம் அங்கத் தினர் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதிலே ஒரு சிறிய பகுதி தான் வந்திருக்கிறது. அரசாங்கம் பொதுவாக எல்லா இடங்களி லும் கல்லூரிகளை அமைப்பதற்கு நிதி உதவி செய்து வந்தாலும், மக்கள் என்ன உதவி செய்வதாகக் கூறினார்களோ அந்த அளவுக் காகிலும் நிதி உதவியைப் பெற்றுக் கொடுப்பதில் கனம் அங்கத் தினர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டால் நலம்.

Shift system in Colleges

* 106 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have proposed to introduce shift system in select colleges in each district of the State, for coping up with the applications for admission to P.U.C.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. வை. சங்கரன் : ஷிப்ட் முறையை வைப்பதன் மூலமாக இருக்கின்ற கட்டடத்திலேயே அதிகப் பணச் செலவு இல்லாமல், கூடுதல் ஆசிரியர் தேவை இல்லாமல் நடத்தக்கூடிய அளவுக்கு அனுகூலமான திட்டமாக இருக்கும்போது அரசாங்கம் இதை வேண்டாமென்று கூறக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இருக்கின்ற கட்டடம் போதும் என்றாலும் இருக்கின்ற ஆசிரியர்களை வைத்தே இரண்டு ஷிப்ட் நடத்த முடியாது. பகல் காலத்தில் மாணவர்கள் வருவதிலேயே பல கோளாறுகள் இருக்கின்றன ; இரவில் வரச் சொன்னால் மேலும் சிரமந்தான். மேலும் தற்போது அவ்வளவு நெருக்கடியும் இல்லை. இந்த ஆண்டிலே புதிதாக 14 கல்லூரிகள் ஆரம்பிக்கப்

[5th August 1966

பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் பி.யு.சி. வகுப்பில் மொத்தத்தில் 1,500 ஸ்தானங்கள் காலியாக இருந்தன. ஆகவே, ஷிப்ட் முறையைப் பற்றித் தத்துவ ரீதியாகப் பேசுவதில் பயன் இல்லை. ஷிப்ட் முறை அவசியமில்லை. அதை நிறைவேற்றுவதில் சிரமம் இருக்கிறது என்று முன்பே கூறினேன்.

Industrial congestion around City

* 107 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the measures the Government have proposed to adopt for preventing further industrial congestion around Madras and regulating the future growth of industries in the City's suburbs according to a set pattern?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : சென்னை நகரிலே நெரிசலைத் தவிர்க்கும் வகையில் வெளியே தள்ளி தொழிற்சாலைகளை அமைக்க தொழில் அதிபர்கள் முன் வந்தால் அவர்களுக்குத் தனியாக ஏதேனும் அனுகூலங்கள் கொடுக்கப்படுகின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேண்டிய வசதிகள் அளிக்கப் படுகின்றன. அதற்கு மேல் ஒன்றும் அவசியம் இல்லை.

விவசாயக் கருவிகள் உற்பத்தி

* 108 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு உதவியாக உள்ள தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் வகுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The following departmental units are already functioning in Thanjavur district :—

(1) *Brassware Unit, Kumbakonam* : Manufacturing dusters, sprayers, inter-cultivators and similar agriculture implements.

(2) *General Purpose Engineering Workshop, Mayuram* : Manufacturing among other things, inter-cultivators, bund formers, gundakas.

(3) *Carpentry and Blacksmithy Unit, Mannargudy* : Manufacturing among other things, bund formers, inter-cultivators, Gundakas, Wet land buttlars.

(4) *Model Foundry Industrial Estate, Thanjavur* : Manufacturing among other things, Mould Board ploughs, Melur ploughs, etc.

---

a Printed as Appendix I on pages 585-586.